**செய்தி வெளியீடு எண்: 109** **நாள்: 20.02.2013**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (20.2.2013) தலைமைச் செயலகத்தில், நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில், 1 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழிசை மூவரின் நினைவாக அவர்களது முழு உருவச் சிலைகளுடன் அமைக்கப்பட்டுள்ள மணிமண்டபத்தினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், விழுப்புரம் மாவட்டம், ஓமந்தூரில், 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு மார்பளவு சிலையுடன் கூடிய மணிமண்டபம்; திண்டுக்கல் மாவட்டம், விருப்பாச்சியில் 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் அவர்களுக்கு முழுஉருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் 63 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட மகாமகம் பல்நோக்குக் கலையரங்கம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்கள்.

நாட்டுக்கு உழைத்த நல்லவர்களுக்கும், இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், தமிழ் மொழிக்குத் தொண்டாற்றியவர்களுக்கும், தமிழக அரசு அவர்களது நினைவினைப் போற்றும் வகையில் மணிமண்டபங்களை எழுப்பி விழா எடுத்து சிறப்பித்து வருகிறது.

அந்த வகையில், தமிழில் கீர்த்தனைகளை இயற்றி தமிழுக்குப் பெருமை சேர்த்தவர்கள் இசை மேதைகளான முத்து தாண்டவர், அருணாச்சலகவிராயர், மாரிமுத்தாபிள்ளை ஆகிய தமிழிசை மூவர் ஆவார்கள். இவர்கள் கி.பி. 17–ஆம் நூற்றாண்டிலும் கி.பி.18–ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்து தமிழுக்கும், தமிழிசைக்கும் பெருந்தொண்டாற்றியவர்கள். சீர்காழியில் இவர்களுக்கு 1 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முழு உருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம்;

1947 ஆம் ஆண்டிலிருந்து 1949ம் ஆண்டு வரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் அவரது சொந்த

ஊரான ஓமந்தூரில் 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அவரது மார்பளவு சிலையுடன் கூடிய மணிமண்டபம்;

வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து திண்டுக்கல் பகுதியில் போரிட்டவர் விருப்பாச்சி கோபால் நாயக்கர். இவர் சிவகங்கை ராணி, வேலுநாச்சியார், பாஞ்சாலங்குறிச்சி ஊமைத்துரை ஆகியோருக்குத் தேவையான பாதுகாப்பையும், படைபலத்தையும் வழங்கியவர். மேலும், வெள்ளையருக்கு எதிரான போரில் மைசூர் மன்னர் திப்பு சுல்தானுக்கு துணையாக இருந்தவர். மருது சகோதரர்கள் கன்னடத் தளபதி தூண்டாஜிவாக், கேரளவர்மா, கோவை ஷாஜிகான் ஆகியோரை இணைத்து தென்னிந்திய விடுதலைப் போரில் ஆங்கிலேயர்களை எதிர்த்து போரிட்டவர். இறுதியில் ஆங்கிலேயர்களால் கோபால் நாயக்கரும், அவரது மகன் முத்து வெள்ளைய நாயக்கரும் தூக்கிலிடப்பட்டனர். நாட்டு விடுதலைக்காக உயிர் தியாகம் செய்த கோபால் நாயக்கரின் நினைவாக விருப்பாச்சியில் 69 லட்சம் மதிப்பீட்டில் அவரது முழு உருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம்;

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் நகரம் மற்றும் அதன் சுற்றுப் பகுதியில் உள்ள பொதுமக்கள் திருமண நிகழ்ச்சிகள், சுப நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள், நாடக விழாக்கள் மற்றும் மாநாடுகள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தும் வகையில் நவீன வசதிகளுடன் கூடிய சமையலறை, சுமார் 1,000 பேர் அமரக்கூடிய வகையில் மேசை மற்றும் நாற்காலிகளுடன் கூடிய உணவருந்தும் கூடம், மணமக்கள் தங்க குளிர்சாதன வசதிகளுடன் கூடிய தனித் தனி அறைகள் மற்றும் உறவினர்கள் தங்குவதற்கான அறைகள், வாகனங்கள் நிறுத்துவதற்கான இடவசதி ஆகிய பல்வேறு வசதிகளுடன் 63 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட கும்பகோணம் மகாமகம் கலையரங்கம்;

என மொத்தம் 3 கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட மணிமண்டபங்களையும், கலையரங்கத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் திறந்து வைத்தார்கள்.

மேலும், தமிழ் வளர்ச்சித் துறைக்காக உருவாக்கப்பட்ட www.tamilvalarchithurai.org என்ற புதிய வலைதளத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ் வளர்ச்சித் துறைக்கென தனி வலைதளம் இல்லாத குறையினைப் போக்கும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறைக்கென புதிய வலைதளம் உருவாக்கிட ஆணையிட்டிருந்தார்கள்.அதன் அடிப்படையில் **2012–2013**ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில், தமிழ் வளர்ச்சித் துறைக்கென **5** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தனியாக ஒரு வலைதளம் உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

தமிழ் வளர்ச்சித் துறைக்காக உருவாக்கப்பட்ட www.tamilvalarchithurai.org என்ற புதிய வலைதளத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்கள். இந்த வலைதளத்தில், தமிழ் வளர்ச்சித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கப் பணிகள், தமிழ் வளர்ச்சி தொடர்பான திட்டங்கள், நாட்டுடைமை ஆக்கப்பட்ட தமிழறிஞர்களின் நூல்கள் விவரம், ஆட்சிச் சொல்லகராதி, தமிழ் வளர்ச்சித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு, தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்படும் விருதுகள் மற்றும் அவற்றைப் பெற்ற தமிழறிஞர்கள் விவரம் உள்ளிட்ட பல்வேறு விவரங்கள் அனைவரும் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் இடம்பெற்றுள்ளன. மேலும், தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்படும் சிறந்த நூலுக்கான பரிசு, நூல் வெளியிட நிதியுதவி, அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி, தமிழறிஞர்களுக்கு நிதி உதவி போன்ற திட்டங்களுக்கான விண்ணப்பப் படிவங்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதியும் இந்த வலைதளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–**9.**
நாள்: 20.2.2013